# மாலை முரசு

பக்கங்கள் 18 + 3

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 30 புதன்கிழமை 16.10.2024 | அதிர்வு 76


## கொழும்பில் ஒருவர் சுட்டுப் படுகொலை!



கொழும்பு, கிராண்ட்பாஸ் – மாதம்பிட்டிய மயானத்துக்கு அருகில் காரில் வந்த சிலர் மேற்கொண்ட 02▶


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்


# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கைகளை திங்கட்கிழமை வெளியிடுவேன்

## முன்னாள் எம்.பி. கம்மன்பில அதிரடி அறிவிப்பு

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான இரண்டு விசாரணை அறிக்கைகளையும் எதிர்வரும் திங்கட்கிழமை வெளியிடுவேன்." - என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். 02▶



### அதிகாரப் பகிர்வை மறுத்தால்

## கோட்டாவுக்கு நடந்ததே அநுரவுக்கும் நடக்கும்!

### எச்சரிக்கின்றது ரெலோ





(எஸ்.நிதர்ஷன்)

அதிகாரப் பகிர்வை மறுத்தால் கோட்டாவுக்கு நடந்ததே அநுரவுக்கும் நடக்கும் என்று ரெலோ இயக்கத்தின் யாழ்ப்பாணம் மாவட்ட அமைப்பாளரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சபா. குகதாஸ் 02▶




## சிறுவர் இல்லத்தின் காவலாளி கழுத்து வெட்டப்பட்டு கொலை!

### இரண்டு சிறுவர்கள் கைது

கொழும்பு, பொரலஸ்கமுவ பிரதேசத்தில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் பணிபுரிந்த காவலாளி ஒருவர் கழுத்து வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் 02▶



# யாழில் பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டில் திருட்டு: மூன்றரைப் பவுணுடன் சந்தேகநபர் ஒருவர் சிக்கினார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவாலிப் பகுதியில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டில் நகைகள் மற்றும் ஒரு தொகை பணம் என்பன களவாடிய சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நேற்று கைது செய்த யாழ். பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார், மேற்படி நபரிடம் இருந்து மூன்றரைப் பவுண் நகையை மீட்டனர்.

கடந்த வாரம் பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டின் குளியலறை ஊடாக உள்நுழைந்த திருடர்கள், ஆறரைப் பவுண் நகை மற்றும் 29 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிச் சென்றிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சந்தேகநபரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தினர.

பிரதான சந்தேகநபரைக் கைது செய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இரண்டு ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் இன்னும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அவற்றைப் பகிரங்கப்படுத்துவதற்கு அரசுக்கு 7 நாட்கள் அவகாசம் வழங்கியுள்ளேன்.

இந்தக் காலப்பகுதிக்குள் அறிவிக்கை வெளியிடப்படும் என்ற உத்தரவாதத்தை அரசு வழங்கினால் என்னிடம் உள்ள அறிக்கைகளை அரசிடம் கையளிப்பேன். அவ்வாறு இல்லாவிட்டால் நான் கூறியதுபோன்று எதிர்வரும் திங்கட்கிழமை அறிக்கைகளை வெளியிடுவேன்." - என்றார்.

## கோட்டாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

ஜனெத்தா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) என்ற அடிப்படை சிங்கள இனவாதத்தில் வளர்க்கப்பட்டு இன்று தேசிய மக்கள் சக்தி என்ற பெயருடன் ஜனாதிபதிக் கதிரையில் அமர்ந்து கொண்ட அநுர அரசு, கோட்டாபயவின் தம்பியர்கள் என்பதை தமிழர் விவகாரத்தில் காட்ட முனைந்தால் ஆட்சிக் கதிரையில் இருந்து வெளியேறுவதற்கான நாட்களைஎண்ணும் நிலைமை உருவாகும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டா தமிழர்களுக்குப் பொருளாதாரப் பிரச்சினை மட்டும்தான் உள்ளது எனவும், அதிகாரப் பகிர்வு தேவையற்றது எனவும், 13 ஆம் திருத்தம் நீக்கப்பட வேண்டும் எனவும் கூறிக் கொண்டு அதனை நீக்கப் புதிய அரசமைப்பு குழுவைத் தன்னிச்சையாக நியமித்ததன் விளைவை எப்படி அனுபவித்தார் என்பதை நாடே அறியும்.

கோட்டாவின் வெளியேற்றத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி ஜனாதிபதிக் கதிரைக்கு வந்து விட்டு கோட்டா தமிழர் விவகாரத்தில் கொண்டிருந்த நிலைப்பாட்டை அநுர கையில் எடுப்பதாக இருந்தால் கோட்டா சந்தித்த அதே நிலையை எதிர்கொள்ள வேண்டி வரும்.

தமிழர் விவகாரத்தை இனவாதமாகக் கையில் எடுப்பதான வெளிப்பாடுகள்தான் தொடர்ச்சியாக அநுர அரசின் பிரதிநிதிகள் அனைவரும் வெளிப்படுத்தி வருவதை அவதானிக்க முடிகின்றது. இப்படியான வெளிப்பாடு நாட்டின் மாற்றத்துக்கு ஆரோக்கியமாக அமையமாட்டாது." - என்றார்.

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிச்சூட்டில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஓட்டோவில் பயணித்த 35 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இன்று புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, நேற்று செவ்வாய்க்கிழமை இரவு மாத்தறை - கேகனதுர பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திலும் ஆண் ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

ஓட்டோவில் பயணித்த நபரே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

## சிறுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொரலஸ்கமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

அலுபோமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 80 வயதுடைய வயோதிபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் அதிகாரிகள் சிலர், திருட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பில் விசாரணை நடத்துவதற்காகப் பொரலஸ்கமுவ பிரதேசத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை சென்றிருந்தபோது சிறுவர் இல்லத்தில் உள்ள கிணற்றிற்கு அருகில் வைத்து காவலாளியின் சடலத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

காவலாளி உறங்கிக் கொண்டிருந்த போது இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் 16 மற்றும் 17 வயதுடைய இரு சிறுவர்கள் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரலஸ்கமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 2009 இன் பின் தமிழ் மக்களின் ஆணையை தமிழ் அரசியல்வாதிகள் நிறைவேற்றவில்லை

## 'பசு' சின்னத்தில் போட்டியிடும் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வேட்பாளர் தேவானந்த் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

"2009இல் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் ஓர் அரசியல் தீர்வை நோக்கியதான நகர்வுக்காக மக்கள் தமது ஆணையை வழங்கி வந்துள்ளார்கள். ஆனால் ஆணையைப் பெற்ற அரசியலாளர்கள் அதனைச் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை. மக்களின் விருப்பங்கள் நிறைவேற்றப்படவில்லை. அதனால்தான் தமிழ் தேசியப் பேரவை மற்றும் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் கொள்கைகளின் வழி நாம் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றோம்."

– இவ்வாறு 2024 நாடாளுமன்றத் தேர்தலிலே யாப்பாணம் மாவட்டத்தில் பசு சின்னத்தில் போட்டியிடும் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் சுயேச்சைக் குழு முதன்மை வேட்பாளர் கலாநிதி தேவானந்த் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"இன்றைய அரசியல் சூழலில் தமிழ் மக்கள் மத்தியில் பரந்த எதிர்ப்புணர்வு இருப்பதைப் பார்க்க முடிகின்றது. போரால் முடிந்த பின்னர் தமிழ் மக்கள் தமது வாழ்க்கை மேம்பாடு, அரசியல் இருப்பு, சுயநிர்ணயம் என்பவை சார்ந்து ஒரு தீர்வு நோக்கிச் செல்லும் என்று பேரவாவோடு இருந்தார்கள். ஆனால், அவர்களின் பேரவா நிறைவேறும் திசையை நோக்கி எமது அரசியல் செல்லவில்லை. எனவேதான் ஒரு மாற்றம் தேவை என்று இன்று எண்ணுகின்றார்கள். தமது வாழ்வின் தேடலாக, தமது விரத்திக்கான வடிகாலாக இந்த நாடாளுமன்றத் தேர்தல் களத்தைப் பார்க்கிறார்கள்.

இந்த அரசியல் சூழலையே தமிழர் சம உரிமை இயக்கம் பயன்படுத்திக் கொள்ள முனைகின்றது. எமது இயக்கம் தேர்தலுக்காக முளைத்த ஒரு கட்சி அல்ல. நீண்ட பயணத்தைக் கொண்ட இயக்கம். இப்போது தேர்தல் களத்தில் அது தன்னை முன்னிலைப்படுத்தியிருக்கின்றது.

2009இல் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் ஓர் அரசியல் தீர்வை நோக்கியதான நகர்வுக்காக மக்கள் தமது ஆணையை வழங்கி வந்துள்ளார்கள். ஆனால், ஆணையைப் பெற்ற அரசியலாளர்கள் அதனைச் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை. மக்களின் விருப்பங்கள் நிறைவேற்றப்படவில்லை. அதனால் அந்தப் பயணத்தில் தொடர்ச்சியாக இணைந்திருந்த பலர், முக்கியமாக தொழில்வல்லுநர்களான மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கல்வியியலாளர்கள் எனப் பலர்




இணைந்துதான் இன்று சமஉரிமை இயக்கத்தின் ஊடாக தேர்தலில் போட்டியிடுகின்றோம். தமிழ்த் தேசிய சக்தி என்கிற பின்புலத்தில் இருந்துதான் இந்த இயக்கம் இயங்குகின்றது.

### பொருளாதார மேம்பாடு

கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் ஊடாக தேசியத்தை நோக்கி நகர்தல் என்பது எமது முக்கிய குறிக்கோள். போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இனியும் நலிந்து கிடக்காமல் பொருளாதாரத்தில் மேம்படவேண்டும். ஏனென்றால் எப்போதுமே ஓர் அடிப்படையான தேவை பூர்த்தி செய்யப்படும்போதுதான் அந்த மக்கள் அல்லது இனம் தமது விடுதலையைப் பற்றி முழுமையாகச் சிந்திக்க முடியும். உச்சமான சுயநிர்ணய உரிமைக்கான தேடலில் ஈடுபடமு-டியும். அதை நோக்கி நகர்வது தான் எமது முதன்மைக் கொள்கை.

இப்போதைய அரசியல் சூழலில் மக்களின் அடிப்படைத் தேவைகளை முன்னெடுப்பதற்கான எந்தவொரு கொள்கை முன்னெடுப்பும் செயற்றிட்டங்களும் பரந்தளவில் மேற்கொள்ளப்படவேயில்லை. அதற்குப் பதிலாகக் கிள்ளித் தெளிக்கும் நிலைதான் வலுப்பெற்றுள்ளது. சலுகை அரசியல்தான் இடம்பெறுகின்றது. இதனால் ஒரு சிலர் மட்டும்தான் நன்மை அடைகிறார்கள். அந்த நிலை மாறி ஒட்டுமொத்த தமிழ் மக்களும் நன்மையடைய வேண்டும் என்பதுதான் எமது இலக்கு. இதற்கு மக்களிடம் அதிகாரம் இருக்கவேண்டும். அதை வலியுறுத்தித்தான் தமிழர் சமவுரிமை இயக்கம் இந்தத் தேர்தல் களத்திலே இறங்கியிருக்கின்றது.

### கல்வி

ஒரு காலத்தில் கல்வியில் மிக உயர்ந்த நிலையில் இருந்த நாம் இன்று பின்னடைந்து இருக்கின்றோம். அதிலிருந்து மீளவேண்டும். எல்லோருக்கும் சமமான கல்வி என்பதே எமது இலக்கு. எல்லோரும் சம வாய்ப்பைப் பெறுவதற்கான ஒரு சூழலை நாங்கள் உருவாக்க வேண்டி இருக்கின்றது. எமது கல்விப் பின்னடைவுக்கு அதில் உள்ள அரசியல் தலையீடு முக்கிய காரணம். தொடக்க நிலைக் கல்வியாக இருந்தாலும், பாடசாலைக் கல்வியாக இருந்தாலும், பல்கலைக்கழக கல்வியாக இருந்தாலும் எல்லா இடங்களிலும் அரசியல் தலையீடு காணப்படுகின்றது.

அண்மைய தரவுகளின் அடிப்படையில் கிட்டத்தட்ட 87 பாடசாலைகள் யாழ். மாவட்டத்தில் மட்டும் மூடப்பட்டுள்ளன. அப்படிப் பாடசாலைகளை மூடுவதற்கான கல்விக் கொள்கையைத்தான் நாம் வைத்திருக்கின்றோம். கிராமங்களில் இருந்து நகரங்களை நோக்கி கல்வித் தேவைக்காகத் தினமும் பெற்றோர்கள் படையெடுக்கவேண்டியதாக இருக்கின்றது. அதற்காகவே அவர்கள் நிறையச் செலவிடுகின்றார்கள். இந்த நிலை மாறவேண்டும். கிராமத்தில் உள்ளவர்களுக்கும் நகரத்தில் உள்ளவர்களுக்கும் சமமான கல்வி வாய்ப்பு கிடைக்கவேண்டும். அதனடிப்படையிலேயே தமிழர் தேசம் கட்டியெழுப்பப்படவேண்டும். அதுவே எமது இலக்கு.

### மருத்துவத்துறை

ஆதார வைத்தியசாலைகள் இருக்கக்கூடிய அனைத்து இடங்களிலுமே தரமான மருத்துவ சேவை வழங்கப்படவேண்டும். ஆதார வைத்தியசாலைகள் தரமான வள ஆளணிகளோடு இல்லை. அதைத் தரவேண்டிய மத்திய அரசு அதை வழங்கவில்லை. அரச இலவச வைத் தியத்துறையை தனியார் மயப்படுத்தும் நோக்கோடு கொழும்பு செயற்படக்கூடும். அதற்கு அனுமதிக்கக்கூடாது. நாம் அதை எதிர்ப்போம். தரமான மருத்துவ சேவை அனைத்து மக்களுக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காகப் பாடுபடுவோம்.

### வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கான போராட்டம்

வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் மீதான

(04ஆம் பக்கம் பார்க்க)




# சுற்றுச் சூழலைப் பாதுகாக்க திருமலையில் விழிப்புணர்வு

(ஹஸ்பர்)

திருகோணமலை நகரில் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் பசுமையான நகரை உருவாக்கவும் விழிப்புணர்வு நடைபவனி இன்று (16) இடம்பெற்றது.

இந்த நிகழ்வை திருகோணமலை எகட் கரித்தாஸ் ஏற்பாடு செய்திருந்தது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டத்தின் பிரகாரம் "சுத்தமான மற்றும் பசுமையான திருகோணமலை" எனும் தொனிப் பொருளின் கீழ் இடம்பெற்ற இந்த நடைபவனியானது திருகோணமலை நகர் பஸ் நிலையத்தில் இருந்து திருகோணமலை நகரசபை வரை நடை பவனியாக சென்று நகர சபைச் செயலாளரிடம் மஹஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

சுத்தமான மற்றும் பசுமையான திருகோணமலை வீதிகள் பொது இடங்களில் குப்பை போடாதீர்கள், மண்ணையும் நீரையும் மாசுபடுத்தும் பிளாஸ்டிக்குகளை ஒழிப்போம், மரங்களை வளர்ப்போம், தூய்மையான காற்றைச் சுவாசிப்போம் போன்ற பல விழிப்புணர்வுப் பதாகைகளை ஏந்தியவாறும் நடை பவனியாகச் சென்றனர்.

இதில் பொது மக்கள், எகட் கரித்தாஸ் நிறுவன பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




## 2009 இன் பின்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடக்குமுறைகளை எதிர்த்து நிற்போம். கொல்லப்பட்ட, பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதியை வலியுறுத்துவோம். ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அவர்களின் உரிமைகளைப் பாதுக்காகவும் முன்னிற்போம்.

பெண்களுக்கு சம உரிமை வழங்குவது எமது அடிப்படைக் கொள்கை. எமது வேட்பாளர் பட்டியலிலேயே நான்கு பெண்கள் இடம்பெற்றுள்ளனர். யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் அரசியல் கட்சிகளில் எதிலும் எமது வேட்பாளர்கள் அளவுக்குப் பெண்கள் கிடையாது. மூத்த சட்டத்தரணிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள், தொழில்முனைவோர் என்று பல்துறை சார்ந்த பெண்களும் எமது தரப்பில் போட்டியிடுகின்றனர். பெண்களுக்கான உரிமைக்காகப் போராடுவதே எமது நோக்கம்.

### பல கோடி ரூபா அரசியல்

அரசியலில் ஈடுபடுவதென்றால் பல கோடி ரூபா தேவை என்ற பேச்சு இருக்கின்றது. நாங்கள் அவ்வளவு பணம் செலவழிக்கக்கூடியவர்கள் இல்லை. அப்படிச் செலவழிப்பவர்களுக்கு அந்தப் பணம் எங்கிருந்த வருகிறது? செலவழித்த பணத்தை அவர்கள் அரசியலிருந்து எப்படித் திரும்பப் பெறுவார்கள், என்பதை மக்கள் சிந்திப்பார்களாயின் யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்பது அவர்களுக்குத் தெளிவாகிவிடும்.

நீங்கள் இன்று 5 ஆயிரம் ரூபாவுக்கு வாக்குகளை விற்றால் இன்னும் 5 வருடங்களுக்கு அவர்கள் உங்களைக் கவனிக்க மாட்டார்கள்.

### மதுபான நிலைய உரிமம்

இலங்கையில் மதுப் பாவனையில் யாழ்ப்பாணம் இரண்டாவது இடத்தில் இருக்கின்றது. நுவரெலியா முதலாவது இடத்தில் இருக்கின்றது. இவை இரண்டுமே தமிழ்ப் பகுதிகள்.

இந்த மக்களை மது போதைக்குப் பழக்கப்படுத்துவதும் அடிமையாக்குவதும் திட்டமிடப்பட்ட செயற்பாடு. ஒரு இனத்தை அதுவும் தமது உரிமைக்காகப் போராடிய ஒரு இனத்தைச் சிதைப்பதற்காக மிக நுட்பமாகத் திட்டமிடப்பட்ட ஒரு செயற்பாடுதான் இந்த மதுவும் போதைப் பொருள்களும். இன்று இளைஞர்கள் பலர் போதைக்கு அடிமையாகி இருக்கின்றார்கள். அதனால் மிக இளவயதிலேயே இறந்தும் போகிறார்கள். அதனால் அவர்களின் குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன.

இந்தப் பின்னணியில் தமிழ் அரசியல்வாதிகள் மதுபான விற்பனை நிலைய அனுமதியில் அக்கறை கொண்டிருந்தார்கள் என்பது நிச்சயமாக தமிழ் மக்களைப் பாதிக்கும் ஒரு விடயம். அதை அதை அவர்கள் தவிர்த்திருக்க வேண்டும். மதுவுக்கும் போதைப் பொருளுக்கும் எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளிலே தமிழ் அரசியல் வாதிகளைப் பார்க்கமுடியும். ஆனால், அவர்கள்தான் மது விற்பனை நிலையங் களுக்குப் பின்னாலும் இருக்கின்றார்கள் என்பது பெரும் அபத்தம்." – என்றார்.




# மீனவர், விவசாயிகளுக்குச் சலுகைகள்; தோட்டத் தொழிலாளருக்கு வழங்கவில்லை!

## ஜனாதிபதியின் செயற்பாடு தொடர்பில் ஜீவன் தொண்டமான் குற்றச்சாட்டு

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

நாட்டில் உள்ள மீனவர்களுக்கும் விவசாயிகளுக்கும் சலுகைகளை வழங்கிய புதிய ஜனாதிபதி, ஏன் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித சலுகைகளையும் வழங்கவில்லை என்று இலங்கை தொழிலாளர் காங்ரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான ஜீவன் தொண்டமான் குற்றம் சுமத்தியுள்ளார்.

இன்று (16) புதன்கிழமை நோர்வூட் நிவ்வெளிகம பகுதியில் இடம்பெற்ற முதலாவது தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன் போது மேலும் கருத்து தெரிவித்த பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், பெருந்தோட்ட தொழிலாளர்களுடைய சம்பள விடயத்தில் 1350 ரூபா அடிப்படை சம்பளமும் மேலதிக கொடுப்பனவு 350 ரூபாவை அதிகரிக்குமாறு சம்பள நிர்ணய சபையில் நாங்கள் கோரிக்கையை முன்வைத்த போது அதனை நிராகரித்தது தற்போதய ஜனாதிபதியுடைய கட்சியான தேசிய மக்கள் சக்தி.

விமர்சனங்கள் பல இருந்தாலும் நான்கு வருடகாலமாக மக்களுக்காக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தேன். அதேபோல் மக்களின் பிரச்சினைகளுக்குக் களத்தில் இறங்கி நான் குரல் கொடுத்திருக்கின்றேன். எந்த இடத்திலும் நான் ஓடி ஒழியவில்லை.



நுவரெலியா மாவட்டத்தில் இந்த முறை 30 சுயாதீன கட்சிகள் உருவாகியுள்ளது. எந்தக் கட்சியாக இருந்தாலும் தமிழ் பிரதி நிதித்துவத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் இந்த முறை தேர்தலில் போட்டியிடுகின்ற பட்டியலை எடுத்து நோக்கினால் முன்னாள் அமைச்சர் திகாம்பரம் நான் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராமகிருஷ்ணன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ராமேஸ்வரன் உதயகுமார் போன்ற அநேகமான பெயர்கள் காணப்படும்.

ஆனால், தற்போது ரவீந்திரன் என்பவருடைய பெயரும் காணப்படும். அவர்தான் நுவரெலியா மாவட்டத்தில் பிரதான வேட்பாளர். அவர் யார் புரொடொப் தோட்டப் பகுதியில் முகாமையாளராக இருந்து மக்களைத் தாக்கித் தொழிற்சாலையில் அடைத்து வைத்திருந்தவர். கடந்த ஏழு வருடங்களுக்கு முன்பு நாங்கள்தான் சென்று அந்த மக்களை விடுவித்தோம். அவர் போன்ற ஒருவருக்காக மலையகத்தில் சிலர் கொடியை உயர்த்திக் கொண்டு ஆதரவு வழங்கி கொண்டு இருக்கிறார்கள்.

தனக்கு கிடைத்த வளங்களை வைத்து மாத்திரம் வேலை செய்ய முடியுமே தவிர வளங்களை உருவாக்க முடியாது. நாடு வங்குரோத்து அடைந்த போது கூட, மலையகத்தைப் பொறுத்த வரையில் இரண்டு சம்பள உயர்வுகளைப் பெற்றுக் கொடுத்துள்ளோம். ஆரம்ப காலம் முதல் நான் சொல்லி வருவது எம்மிடம் இருப்பது 10 ஆயிரம் வீடுகள். ஆனால் 10 ஆயிரம் வீடுகளை வைத்து ஆறு அரசியல்வாதிகள் ஒன்றை லட்சம் பேரை எமாற்றிக் கொண்டு வருகிறார்கள்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வாக்குகளுக்காக ஒரு தவறான வதந்திகளை பரப்பாது. கோட்டபாய ராஜபக்ஷ அரசு அமைக்கும் போது அவருக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து கட்சிகளும் இல்லாமல் போயுள்ளன. நாட்டை மீட்டெடுத்த முன்னாள் ஜனாதிபதி ரணிலை மக்கள் தூக்கி எறிந்து விட்டீர்கள். அதேபோல் எம்மையும் தூக்கிப் போடாமல் இருந்தால் சரி. இதற்குப் பிறகு சம்பள உயர்வு எந்த அடிப்படையில் கிடைக்கும் என்பதை பற்றி எனக்கு கூற முடியாது. பொருளாதார நெருக்கடியின் மத்தியில் உதவி ஆசிரியர் நியமனத்தை பெற்றுக் கொடுத்தோம். மலையக மக்களுடைய வாக்குகளைச் சிதறடிக்க முயற்சி செய்கின்றனர். குடும்ப அரசியலுக்கு எதிர்ப்பு என கூறியவர்கள் களுத்துறை மாவட்டத்தில் தந்தையும் மகனும் போட்டியிடுகின்றனர்.– என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இந்தியாவுடன் முரணிலை

வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத மாதிரி பெரும் பொருளாதார நெருக்கடியை 2022 இல் இலங்கை எதிர்கொண்டு, மீள முடியாத சிக்கலில் - இக்கட்டில் - மாட்டிக் கொண்ட போது விரைந்து, 'உடுக்கை இழந் தவன் கை போல' உதவுவதற்கு முன் வந்த நாடு நமது அயல் தேசமான இந்தியாதான்.

உதவி தேடி இலங்கை அலையத் தொடங் கிய சமயத்தில், தானாகத் தேடி வந்து விரைந்து உதவிகளை வாரி வழங்கி, அந்த இக்கட்டு சமயத்தில் நாடு மூச்சு விடுவதற்கு உதவிய நாடு பாரதம்தான்.

'அயல் தேசத்துக்கு முன்னுரிமை' என்ற இந்தியப் பிரதமர் மோடியின் கொள்கையின் அடிப்படையில் இந்த உதவிகள் வழங்கப் பட்டன. பக்கத்தில் இருந்த நமது தொப்புள் கொடி உறவான தமிழகம் கூட பெருமளவில் உதவிகளை நேரடியாகச் சேகரித்து அனுப்பி வைத்தமையை நாம் மறக்க முடியாது.

ஆனால், இலங்கையில் ஏற்பட்டிருக்கும் புதிய ஆட்சி மாற்றத்தில், அதிகாரத்தைக் கைப்பற்றி இருக்கும் தரப்பு தேர்தல் பிரச்சார காலங்களிடையே இலங்கையில் இந்தியா மேலாதிக்கம் செலுத்துவதாகத் தெரிவித்து, அதற்கு எதிரான தன் நிலைப்பாட்டை வலுவாக - பகிரங்கமாக - எடுத்துரைத்து பிரசாரப்படுத்தி வந்தது.

அது, சீனச் சார்புப் போக்குள்ள இடது சாரித் தரப்பு என்பதால், இலங்கையில் இந்தியப் பங்களிப்புகளுக்கு பங்கம் வரும் என்ற இயல்பான எச்சரிக்கை உணர்வு அந்த ஆட்சிப் பீடம் பதவியேற்ற நாள் தொடக்கமே வெளிப்பட்டு நிற்பது கண் கூடு. இந்த விடயத்தில் புதிய ஆட்சி பீடத் தின் கருத்துகள், நடவடிக்கைகள், செயற் பாடுகள் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகின்றன.

மன்னாரில் இந்திய தரப்பின் அதானி குழும முதலீடுகள் உட்பட சர்ச்சைக்குரிய இந்தியத் திட்டங்கள் குறித்து நவம்பர் 14ஆம் திகதி பொதுத் தேர்தலுக்குப் பின்னர் வரும் புதிய அரசு முடிவு எடுக்கும் என்று தற்போதைய ஆட்சி பீடம் அறிவித்துள்ளது. இவ்விகாரத்தில் தீர்மானம் எடுக்கும் விட யத்தை அது சற்றுத் தள்ளிப் போட்டி ருக்கின்றது.

ஆட்சி - அதிகாரப்பிடி - முழுமையாக புதிய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் கைகளுக்குள் வந்துவிட்ட போதிலும், அவர் தலைமை யிலான புதிய அமைச்சரவை நாட்டின் நிர் வாக கட்டுப்பாட்டை தன் பிடிக்குள் கொண்டு வந்து விட்டபோதிலும், வழமை யான தனது இந்திய எதிர்ப்பு நிலைப் பாட்டை உடனடியாக நேரில் வெளிப்படுத் திக் காட்டுவதில் அவரது அரசு இப்போ தைக்குப் பின்நின்று வருகிறது என்றே தோன்றுகின்றது.


ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டி யமை போல பொதுத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. தேர்தலில் வென்று வலிமையான அரசு ஒன்றை அமைத்த பின் னர், இந்தியாவுக்கு எதிரான தன் கைவ ரிசையை புதிய ஆட்சிப் பீடம் காட்டக்கூடும். அதற்கான முன் ஆயத்தம் தான் இவ்விட யங்களில் தனது தீர்மானத்தை பொதுத் தேர்தல் முடியும் வரை ஒத்தி வைத்திருப்ப தான புதிய ஆட்சியாளர்களின் அறிவிப்பு.

மன்னார் விடயத்தில் அதானி குழுமத் திட்டங்கள் தொடர்பில் தற்போதைய பொதுத் தேர்தலின் பின்னர் - புதிய அரசு பதவியேற்ற பின்னர் - மறுபரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும் என்ற தனது தீர்மானத்தை புதிய ஆட்சிப் பீடம் சட்டமா அதிபர் மூலம் உயர் நீதிமன்றத்திற்கும் தெரியப்படுத்தியுள்ளது.

ஆனால் பக்கத்தில் வலிமையான அயல் தேசமாக இருக்கும் இந்தியாவைப் புறக் கணித்து - உதாசீனப்படுத்தி - அதன் இலங் கையுடனான ஈடுபாட்டை மலினப்படுத்தி - ஒரு தீர்மானத்தை புதிய ஆட்சிப் பீடம் எடுக்குமானால் அதன் விளைவுகள் அரசி யல், புவியியல், கேந்திரப் போக்குகளில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய வையாக இருக்கும். அவற்றை புதிய ஆட் சிப் பீடமும் இலங்கை தேசமும் எதிர் கொள்வது மிக நெருக்கடியானதாகவும் சிக்கல் நிறைந்ததாகவுன் அமையும்.

பக்கத்திக் இருக்கும் உபகண்டமான இந்திய வல்லாதிக்கத்தின் பாதுகாப்பு மற்றும் அரசியல், புவியியல் கேந்திர நலன் களைப் புறக்கணித்து, தன் சுயாதிபத்தி யத்தையும் இறைமையையும் தன்னிஷ்படி இலங்கைபிரயோகித்துபயன்படுத்துகின்றது என்ற பெயரில் செயல்படத் தொடங்குவது மிகச்சிக்கலான விளைவுகளையும் நெருக்கடி களையும் கொண்டுவரும் என்பதை புதிய ஆட்சிப் பீடம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எது, எப்படியாயினும், பிராந்திய யதார்த் தங்களுக்குக் கட்டுப்படாமல் தன் கொள் கைப் போக்குப் பிடிவாதத்தில் புதிய ஆட் சிப் பீடம் இறுக்கமாக நிற்குமானால் அதன் பாதிப்பான விளைவுகளை - விபரீதங்களை - இலங்கை தேசம் எதிர்கொண்டேயாக வேண்டியிருக்கும்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555



# யானை சின்னத்தின் வெற்றி தொடர்பில் கலந்துரையாடல்

(க.கிஷாந்தன்)

2024 நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றிக்கு எவ்வாறு தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்வது தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெற்றது.

நவம்பர்மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கான, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேர்தல் பிரச்சாரங்களை ஆரம்பிப்ப தற்கு முன்பதாக கொட்கலை ஊடுகு வளாக கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தது.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான்,



நிதிச்செயலாளரும் தவிசாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன் ஆகியோர்களின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள், அலுவலக உத்தியோகஸ்த்தர்கள், தோட்டக் குழு, மாவட்டத் தலைவர்கள், தலைவிமார்கள் உட்பட பலர் கலந்துக் கொண்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றிக்கு எவ்வாறு வியூகங்களை வகுத்து தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்வது தொடர்பாக விரிவாக கலந்துரையாடித் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

2024 பாராளுன்ற தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், நிதிச்செயலாளரும் தவிசாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன், தேசிய தேசிய அமைப்பாளர் பழனி சக்திவேல் ஆகியோர் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.





# ‘மழைச்சாரல் தொடர்கிறது’ கவிதை நூல் வெளியீடு!

(எம்.எம்.நௌபீக் )

தோப்பூர் ஷாக்கிர் கிலுறுதீன் எழுதிய ‘மழைச்சாரல் தொடர்கிறது’ என்ற கவிதை நூலானது திருகோணமலை மூதூர் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் தோப்பூர் கலை இலக்கியப் பேரவையின் அனுசரணையுடன் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், முன்னாள் பீடாதிபதியுமான எம்.எல். பௌசுல் அமீர் தலைமையில் இடம்பெற்ற இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதம அதிதியாக ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் பி. ஹாஜா முகைதீன் கலந்து கொண்டார். முதல் பிரதியை பிரபல தொழிலதிபரும் அல் – மஸ்ஜிதுல் பலாஹ் ஜும்ஆ பள்ளியின் தலைவருமான எஸ். எச். ஜெஸாஹீர் பெற்றுக்கொண்டார்.

ஜாமிஆ நளீமிய்யாவின் பட்டதாரியான ஷாக்கிர் கிலுறுதீன் எழுதிய இந்த நூலானது தோப்பூர் கலை இலக்கியப் பேரவையின் மூன்றாவது வெளியீடாகும்.

எழுத்தாளரின் குடும்பத்தாரின் பூரண ஒத்துழைப்போடு இடம்பெற்ற இந் நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், மூத்த கல்விமான்கள், புத்திஜீவிகள், உலமாக்கள், கலை இலக்கியப் பேரவைய உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், இலக்கியவாதிகள், நலன்விரும்பிகள், நண்பர்கள் கலந்துகொண்டனர்.



# மட்டக்களப்பில் மாணவ தூதுவ திட்டம்!

(பழுவூரான்)

மாணவ தூதுவ நிகழ்ச்சித் திட்டமானது மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) திருமதி நவருபரஞ்சினி முகுந்தன் தலைமையில் உதவி மாவட்ட செயலாளர் ஜீ. பிரணவனின் மேற்பார்வையின் கீழ் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் மாவட்ட செயலகம் ஆகியன இணைந்து சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் மாணவ தூதவ நிகழ்வு மாவட்டத்தில் இடம்பெற்றது.



மாவட்டத்தில் மூன்றாவது கட்டமாக பதிவு செய்யப்பட்ட 16 பாடசாலைகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட மாணவ தலைவர்களுக்கும் பொறுப்பாசிரியர்களுக்கும் இதன் போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினரினால் பயிற்சிக் கருத்தங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

பாடசாலை மாணவ தலைவர்களுக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பான அறிவை வழங்கி அவர்களை வலுவூட்டி அவர்கள் மூலம் பாடசாலைகளில் சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான ஓர் செயற்றிட்டமாக அமைந்தது.

இந்த நிகழ்வில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட உத்தியோகத்தர்களான திருமதி நிஷா ரியாஸ், த .பிரபாகர் மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# பலமான அரசை அமைப்பதற்கே வாக்குகளைக் கேட்கின்றோம்!

## மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணன்

(க.கிஷாந்தன்)



நடைபெறவுள்ள தேர்தலில் அநேக மானவர்கள் பலமான எதிர்கட்சியை அமைப்பதற்காக வாக்கு கேட்கின்றார்கள். ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி வாக்கு கேட்பது பலமான ஒரு அரசை அமைப்பதற்காகவும் சஜித் பிரேமதாஸவைப் பிரதமராகக் கொண்டு வருவதற்குமே.அதனை நாங்கள் அடைந்தே தீருவோம்.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட தமிழ் முற்போக்கு கூட்டணியின் வேட்பாளருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் முதலாவது தேர்தல் பிரசார கூட்டம் ஹட்டன் கோல்டன் மஹால் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடுகின்ற தமிழ் முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர்களான வேலுசாமி இராதாகிருஸ்ணன், பழனி திகாம்பரம், மயில்வாகனம் உதயகுமார் உட்பட பொது மக்களும் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை மலையக மக்கள் முன்னணி செய்திருந்தது.

இதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மலையக மக்களைப் பொறுத்தவரையில், தமிழ் முற்போக்கு கூட்டணியின் உறுப்பினர்களான நாங்கள் மூவரும் இந்த மக்களுக்கு ஆளும் கட்சியில் இருக்கும் பொழுதும் எதிர் கட்சியில் இருக்கும் பொழுதும் மக்களுக்காக சேவை செய்திருக்கின்றோம். அது மட்டுமல்லாமல் எந்த நேரத்திலும் இந்த மக்களின் துன்ப துயரங்களில் பங்கெடுத்திருக்கின்றோம்.

ஆனால் ஏனைய வேட்பாளர்கள் தேர்தல் காலத்தில் வருவதும் பின்பு காணாமல் போவதும் வழமையான ஒரு விடயமாக மாறிவிட்டது.

எனவே இவர்களை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இன்று பலரும் பல சின்னங்களில் பணத்தை பெற்றுக் கொண்டு தேர்தலில் போட்டியிட்டு எமது சிறுபான்மை மக்களின் வாக்குகளை பிரிப்பதில் ஆர்வமாக இருக்கின்றார்கள். இது எமது இனத்துக்குச் செய்கின்ற ஒரு சாபக்கேடாகும். இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நாங்கள் மூவரும் கடந்த முறை பெற்ற வெற்றியைப் போல இந்த முறையும் வெற்றி பெறுவோம் இந்த மக்களுக்காக வேலை செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.எமது மக்கள் சிறுபான்மை மக்களின் உரிமையை பாதுகாத்து கொள்வதற்காகவும் எமது பிரதிநிதித்துவத்தை தக்கவைத்து கொள்வதற்காகவும் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

தமிழ் முற்போக்கு கூட்டணி கொழும்பு கண்டி, பதுளை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய அனைத்து மாவட்டங்களிலும் எங்களுடைய வேட்பாளர்கள் வெற்றி பெற்று நாடாளுமன்றத்தில் பலமான ஒரு அணியாக நாம் இருப்போம்.- என்றார்.

# விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் முதலிடம்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)



கல்வி அமைச்சால் நடத்தப் பட்ட தேசிய விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவி நயோலின் அபிரியானா அன்ரோனியோ குபேரக்குமார் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டுள்ளார்.

இவர் யாழ். இந்து கல்லூரியில் நடைபெற்ற மாகாண மட்ட போட்டியில் முதலாம் இடத்தையும், மகரகம ஜனாதிபதி கல்லூரியில் நடைபெற்ற தேசிய மட்ட போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று மாவட்டத்துக்கும் மாகாணத்துக்கும் பெருமையைப் பெற்றுத் தந்துள்ளார்.

இவர் 2018 ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் நடைபெற்ற ஆங்கில ஒப்புவித்தல் போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் கட்சிகள், முஸ்லிம் எம்.பிக்களை இல்லாமல் செய்வதற்கான சதி நடக்கிறது!

## வேட்பாளர் அறிமுக நிகழ்வில் உதுமாலெப்பை தெரிவிப்பு

(கே. எ. ஹமீட்)

முஸ்லிம் கட்சிகள், முஸ்லிம் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்கு பாரிய சதி இடம்பெறுகின்றது.

இவ்வாறு வேட்பாளர் அறிமுக நிகழ்வில் நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளரும் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு அட்டாளைச்சேனை கலாச்சார நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இளைஞர்கள் மாற்றம் வேண்டும் என்கின்றார்கள். வடக்கு, கிழக்கிலுள்ள மூன்று முஸ்லீம் கட்சிகளும் இல்லை என்றால் வடக்கு, கிழக்கிற்கு வெளியே உள்ள இளைஞர்கள் எடுத்த முடிவையே இவர்களும் எடுத்திருப்பார்கள். வடக்கு, கிழக்கு இளைஞர்கள் நிதானமாக சிந்திப்பதற்கு இந்த மூன்று கட்சிகளும் காரணமாகவுள்ளன.

நமது நாடாளுமன்ற பிரதிநிதித்துவம், சமூகத்தின் நிலமை போன்றவற்றைச் சிந்தித்து செயற்பட வழியமைத்துள்ளன இந்தக் கட்சிகள்.

இந்த அரசியல் வரலாற்றில் மூவர் கொண்ட அமைச்சரவையுடன் ஒரு பொதுத் தேர்தல் இடம்பெறுவது இதுவே முதல் தடவையாகும். இப்படி ஒரு வரலாற்றை நாம் இதற்கு முன்னர் காணவில்லை. நாற்பது வருடகால முயற்சிக்குப் பலன் கிடைத்திருக்கின்றது தேசிய மக்கள் சக்தியினருக்கு. நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் தங்களு ஆட்சி எவ்வாறு அமையும் என்பது பற்றி தேசிய மக்கள் சக்தியினர் இப்போது கூறியுள்ளனர். நாடாளுமன்றத்தை கலைத்து இடைக்கால அமைச்சரவையை நியமித்து பொதுத் தேர்தலுக் கான திகதியை அறிவித்த பின்னரே தாம் என்ன செய்வோம் என்பதைச் சொல்லியுள்ளனர்.

இந்த நாட்டிலுள்ள ஜனநாயக கட்சிகள் அத்தனையும் ஒன்றிணைந்து நாடாளுமன்றில் பெரும்பான்மையைப் பெற்று அநுர குமார திசாயாக்கவை ஜனாதிபதியாக கொண்டு நாடாளுமன்ற ஆட்சி முறைமையை ஏற்படுத்தலாம்.

அதற்காகவே இந்த நாட்டிலுள்ள எல்லா கட்சிகளும் தேர்தலுக்கு முன்னரும், தேர்தலுக்கு பின்னரும் ஒற்றுமையாக செயற்பட வேண்டியுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் எல்லாக் கட்சிகளும் இணைந்து 113 ஆசனங்களை பெறவில்லை என்றால் இன்னும் பல ஆண்டுகளுக்கு இந்த ஆட்சி சென்று கொண்டிருக்கும். இதுதான் வரலாறு.

இந்த நாடாளுமன்றத் தேர்தல் மிக முக்கியமானது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நான்கு முஸ்லிம்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டாலும் மாவட்டத்தை இழந்தோம். ஒற்றுமையாக செயற்படுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இந்தத் தேர்தல் நீங்கள் நினைப்பது போன்றல்ல. இன்று பழையவர்கள் எல்லோரும் தோற்றுப் போய்விட்டார்கள், புதியவர்களை தெரிவு செய்யுங்கள் என்கிற கோஷமும், அநுரகுமாரவின் கட்சியில் ஒருவரை தெரிவு செய்யுங்கள் என்கிற கோஷமும் எழத் தொடங்கியுள்ளன. ஆனால் பழையவர்கள் இந்த சமூகத்துக்குச் செய்தவற்றை மறந்துவிட்டனர்.

இனவாதம் உருவாக்கப்பட்டபோது நம்மவர்கள் குரலாக நின்றுள்ளனர், அபிவிருத்திகளை மேற்கொண்டுள்ளனர். முஸலிம்கள் பயங்கரவாதிகள் எனப் பேரினவாதம் கோஷமிட்டபோது நமக்கிருந்த ஒரே ஒரு ஆயுதம் முஸ்லிம் பிரதிநிதித்துவம் மாத்திரம்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. அதில் ஐக்கியதேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஏனைய கட்சியை சேர்ந்தவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து அன்று பதவிகளை இராஜினாமா செய்யவில்லை என்றால் நாடு அமைதியடைந்திருக்காது. அந்த ஜனநாயக உரிமை இருந்ததனால்தான் அதனை சாத்தியப்படுத்த முடிந்தது.

முஸ்லீம்கள் சிந்தித்து செயற்பட வேண்டும். அட்டாளைச்சேனைக்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் தேவை. உதுமாலெப்பை எம்.பி. ஆக வேண்டும் என்பதல்ல இங்குள்ள பிரச்சினை. இப்போது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை, முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை காப்பாற்ற வேண்டிய தேவை இருக்கின்றது. நாடாளுமன்ற தேர்தலுடன் முஸ்லிம் கட்சிகளின், முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்கான பாரிய சதி நடந்தேறுகின்றது.

கட்சியை காப்பாற்ற, உயர்ச்சிக்கு நிறைய பணிகளை செய்திருக்கின்றோம். கட்சி வாழ வேண்டும் என்பதுவே உங்களிடம் முதலாவதாக கேட்டுக்கொள்கின்றேன்.

மரச் சின்னத்தில் போட்டியிடுவதில் ஒரு தைரியம் இருக்கின்றது. பல ஜனாதிபதிகளை உருவாக்கியவர்கள் நாம். எனவே இந்த தேர்தல் வரலாற்று முக்கியத்துவம் மிகுந்தது. மட்டக்களப்பு மாவட்டத்திலும் தனித்தே களமிறங்கியுள்ளோம். எனவே ஒற்றுமைப்பட்டு வாக்களிக்க வேண்டிய கடமை மட்டுமே நம் எல்லோர்க்கும் உள்ளது .- என்றார்.

# ஓட்டோ சாரதி கொல்லப்பட்ட சம்பவம் இரண்டு சந்தேகநபர்கள் கைதாகினர்!

(மஸ்கெலியா)

ஓட்டோ சாரதி ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டு சடலம் மடுல்சீம உலக முடிவில் இருந்து பள்ளத்தில் வீசப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹாலி எல றொசெட்வத்த பிரதேசத்தை சேர்ந்த விவேகானந்தன் சுஜீவன் என்ற ஓட்டோ சாரதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் வாகன தரகர் ஒருவர் இரண்டாவது சந்தேக நபராக நேற்று செவ்வாய்க்கிழமை (15) கைது செய்யப்பட்டார் என்று ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

மடுல்சீம, படாவத்தை பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவரே (வயது -27 ) இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தின் முதல் சந்தேகநபராகக் கூறப்படும் மடுல்சீம படாவத்தையைச் சேர்ந்த 34 வயதுடைய சந்திர போஸ் தயாளன் என்ற நபரை சந்தேகத்தின் பேரில் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கிழக்கு ஆளுநரது பிரத்தியேக நியமனங்களில் முஸ்லிம் ஒருவர் இல்லாதது கவலை தருகின்றது!

## முன்னாள் எம்.பி. இம்ரான் தெரிவிப்பு



(ஹஸ்பர், அபு அலா)

கிழக்கு மாகாணத்துக்குப் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள ஆளுநர் நியமித்த அவரது பிரத்தியேக ஆளணியில் முஸ்லிம் ஒருவர் இல்லாதது மிகவும் கவலை தருகின்றது என்று திருகோணமலை மாவட்ட ஐக்கிய மக்கள் கூட்டணியின் முதன்மை வேட்பாளரும், முன்னாள் எம்.பியுமான இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

கிண்ணியா குறிஞ்சாக்கேணியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு அவர் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது,

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர சமீபத்தில் அவரது பிரத்தியேக ஆளணியில் பிரத்தியேக செயலாளர், பொதுசன தொடர்பு உத்தியோகத்தர், ஊடகச் செயலாளர் என 3 நியமனங்களைச் செய்துள்ளார். இந்த நியமனங்களில் முஸ்லிம் ஒருவரும் உள்வாங்கப்படாமை எனக்கு மிகவும் கவலையைத் தருகின்றது.

கிழக்கு மாகாணம் 3 இனங்களும் வாழும் மாகாணம். இதில் முஸ்லிம்கள் கணிசமான தொகையினர். எனவே, இம்மாகாண முஸ்லிம்களது கலாசார பாரம்பரியங்கள் அவர்களது பிரச்சினைகள் தொடர்பாக ஆளுநர் தெரிந்து கொண்டால் தான் சகலருக்கும் நீதியான சேவையை வழங்க முடியும்.

இவ்வாறான நிலையில் ஆளுநரது பிரத்தியேக ஆளணியில் முஸ்லிம் ஒருவர் இருந்தால் அவருக்கு முஸ்லிம்கள் தொடர்பான தேவையான தகவல்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். குறைபாடுகளை தவிர்த்துக் கொள்ளக் கூடிதாக இருக்கும். தற்போது அந்தச் சந்தர்ப்பம் ஆளுநருக்கு இல்லாமல் உள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் நல்ல மனிதர். கல்விமான். பல்கலைக்கழக மட்டத்தில் நியாயமான முறையில் சேவை வழங்கியுள்ளார் என்றெல்லாம் நான் அறிந்துள்ளேன். அவர் வகித்த முன்னைய பதவிகள் அனைத்தும் அலுவலகம் சார்ந்த பதவிகள் அதனால் அவரால் எவ்வித தலையீடும் இன்றி சுதந்திரமாக பணியாற்ற முடிந்தது.

எனினும் தற்போது அவர் வகிப்பது அரசியல் ரீதியான பதவி. வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்த வரையில் இங்கு இனரீதியான அரசியல் ஊறிப் போயுள்ளது. இந்த நிலையில் அரசியல்வாதிகள் தங்களது கோரிக்கைகளை வெல்வதற்காக அடுத்த இனத்தை குறைகூறும் பண்பு இருப்பதை கிழக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் நான் அவதானித்துள்ளேன். இதனால் முஸ்லிம்களுக்கு அநீதி இடம்பெற்ற சம்பவங்களும் உண்டு.

இந்த நிலையில் முஸ்லிம்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படும் போது அதன் உண்மைத் தன்மையை ஊர்ஜிதப்படுத்திக் கொள்வதற்கு நம்பிக்கை மிகுந்த ஒருவர் ஆளுநரது அருகில் இருப்பது அவசியமென நான் கருதுகின்றேன். அவ்வாறான ஒருவர் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவராய் இருந்தால் கூட பரவாயில்லை.

எனவே, இந்த விடயங்களை ஆளுநர் கவனத்தில் கொள்ள வேண்டும். அவரது நியாயமான செயற்பாடுகளுக்கும், எமது கட்சியும் நாட்டு மக்களும் எதிர்பார்க்கும் சிறந்த மாற்றத்துக்கும் இது உறுதுணையாக இருக்கும்.- என்றார்.



# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு அக்கரைப்பற்றில் நிகழ்வுகள்

(எம்.ஏ.றமீஸ்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட நிகழ்வுகள் நேற்று (15) இடம்பெற்றன.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது அக்கரைப்பற்று கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எம்.ஐ.எம்.ஹனீபா அதிதியாக கலந்து கொண்டார்.

பிரதி அதிபர் லெப்டினன் என்.எம்.முகம்மட் ஸாலிஹ், உதவி அதிபர் எம்.எம்.எஸ்.றபா, நூலகப் பொறுப்பாளர் ஏ.எல்.றினோஸ் உள்ளிட்ட ஆசிரியர்கள், நூலக உதவியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வாசிப்பின் அவசியம் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் பெருந்தொகையான மாணவர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது. இவ்விழிப்புணர்வு ஊர்வலம் பாடசாலை வளாகத்தில் இருந்து ஆரம்பித்து அக்கரைப்பற்று நகரின் பல்வேறு பகுதிகளின் வீதிகள் ஊடாக இடம்பெற்றது.

இவ்விழிப்புணர்வு ஊர்வலத்தின் போது வாசிப்பின் அவசியம் குறித்த துண்டுப் பிரசுரங்கள் மற்றும் கையேடுகள் போன்றன மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டன. இதுதவிர ஊர்வலத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் அக்கரைப்பற்று மாநகர நூலகத்திற்கும் சென்று நூலக நடவடிக்கைகள் தொடர்பிலும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய சேவை நிலையமான பிறை எப்.எம் வானொலி நிலையத்துக்குச் சென்று அதன் செயற்பாடுகளையும் பார்வையிட்டனர்.

# நாடாளுமன்றத் தேர்தலும் உறுப்பினர்கள் தெரிவும் எவ்வாறு நடக்கின்றன?

**பொதுத் தேர்தல் பற்றிய விளக்கம்**

இலங்கையில் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் நடைபெறுகின்றது.

அதாவது தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் பெறுகின்ற வாக்கு வீதத்துக்கு ஏற்ப ஆசனங்களைக் கணித உத்திகளைப் பயன்படுத்திப் பிரித்து வழங்குகின்ற முறையாகும். இதன் அடிப்படையில் இலங்கை நாடாளுமன்றத்துக்கு 196 உறுப்பினர்கள் தேர்தல் மூலமும், 29 உறுப்பினர்கள் தேசிய பட்டியல் முறை மூலமும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

**மாவட்ட முறைமை**

தேர்தல் மாவட்ட அடிப்படையிலேயே தேர்தல் நடைபெறுகின்றது. இலங்கையில் மொத்தமாக 25 நிர்வாக மாவட்டங்கள் உள்ள போதிலும் அரசியல் யாப்பின் 96 ஆவது உறுப்புரைக்கு அமைய 22 தேர்தல் மாவட்டங்களாக வரையறை செய்யப்பட்டுள்ளன. அதாவது 25 நிர்வாக மாவட்டங்களில் யாழ். நிர்வாக மாவட்டமும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டமும் இணைக்கப்பட்டு யாழ். தேர்தல் மாவட்டமாகவும் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய நிர்வாக மாவட்டங்கள் இணைக்கப்பட்டு வன்னி தேர்தல் மாவட்டமாகவும் கணிக்கப்பட்டு அம்பாறை நிர்வாக மாவட்டம் திகாமடுல்ல தேர்தல் மாவட்டமாக அழைக்கப்பட்டு 22 தேர்தல் மாவட்டங்களாக வரையறை செய்யப்பட்டுள்ளன.

**ஆசனப் பங்கீடு**

மாவட்டங்களுக்கான ஆசன ஒதுக்கீடு - 196 ஆசனங்கள் 22 தேர்தல் மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் 160 ஆசனங்கள் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் தொகைகளின் அடிப்படையிலும் மிகுதி 36 ஆசனங்களும் மாகாண பரப்பளவு அடிப்படையில் அதாவது ஒரு மாகாணத்துக்கு 4 ஆசனங்கள் என்ற அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

வாக்காளர்களின் தொகையின் அடிப்படையில் 160 ஆசனங்களை பகிர்ந்தளிக்கின்ற போது 22 தேர்தல் மாவட்டங்களிலும் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர் தொகையை 160 என்ற எண்ணிக்கையால் வகுக்கின்ற போது வருவது தகைமை பெறும் தொகையாகும். இந்தத் தகைமை பெறும் தொகையைக் கொண்டு ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் தொகையை தனித்தனியே பிரிக்க வேண்டும். அவ்வாறு பிரிக்கப்பட்ட தொகையே மாவட்டங்களுக்கான சனத்தொகை அடிப்படையிலான ஆசனங்களாக இருக்கும். இருப்பினும் 160 ஆசனங்களும் முழுமையாக பகிர்ந்தளிக்கப்படாது எஞ்சியிருக்கும் ஆசனங்கள் தேர்தல் மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட மிகுதி வாக்காளர் தொகையில் கூடுதலான தொகையினைக் கொண்ட மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படும். இவ்வாறு பெறப்படும் சனத்தொகை அடிப்படையிலான ஆசனங்களும், மாகாண பரப்பளவு அடிப்படையில் பெறப்படும் ஆசனங்களும் கூட்டப்பட்டு ஒரு தேர்தல் மாவட்டத்துக்கான இறுதி ஆசன ஒதுக்கீடாக அமையும்.

**வேட்புமனு தாக்கல் செய்யும் முறை**

பட்டியல் முறையின் கீழேயே வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட வேண்டும். தேர்தலுக்கு முன்னர் தேர்தல்கள் ஆணையாளரால் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்துக்கான



ஆசனத் தொகை வர்த்தமானிப்படுத்தப்படும். ஒவ்வொரு வேட்பு மனுவும் குறித்த மாவட்டத்துக்கு என ஒதுக்கப்பட்ட ஆசன எண்ணிக்கையோடு 3 ஐ கூட்டிவரும் எண்ணிக்கையைக் கொண்டதாக பட்டியல் தயார் செய்யப்பட்டு வேட்புமனு தாக்கல் செய்யப்பட வேண்டும். வேட்புமனுப் பட்டியலில் குறித்த எண்ணிக்கையில் குறைந்த அல்லது கூடிய எண்ணிக்கையைக் கொண்டிருப்பின் அந்தப் பட்டியல் நிராகரிக்கப்படும்.

உதாரணம்: திகாமடுல்ல - 7 + 3 = 10

**வாக்களிக்கும் முறை**

விகிதாசாரப் பட்டியல் முறையின் கீழ் வாக்களிப்பது சற்றுச் சிரமமானது. வாக்காளன் தமது வாக்குகளை அளிக்கும்போது முதலில்தான் விரும்பும் கட்சிக்கு அல்லது சுயட்சை குழுவுக்கு வாக்களிக்க வேண்டும். இவ் அடிப்படை வாக்கு கட்டாயமானதாகும். அத்தோடு அந்தப் பட்டியலில் தான் விரும்பும் 3 வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்கை அளிக்கலாம். மேலும் அப்பட்டியலில் தான் விருப்பு வாக்கைப் பயன்படுத்துகின்றபோது இலக்கங்களுக்கு மேலே புள்ளடியிட்டுக் காட்ட வேண்டும். 3 விருப்பு வாக்குகளும் வாக்குச் சீட்டில் அளிக்கப்பட வேண்டும் என்பது கட்டாயமில்லை. விரும்பினால் ஒரு இலக்கத்துக்கு மட்டும் அல்லது இரு இலக்கங்களுக்கு மட்டும் அல்லது மூன்று இலக்கங்களுக்கும் புள்ளடியிட்டுக் காட்டலாம். அல்லது எந்தவொரு இலக்கத்துக்கும் புள்ளடியிடாது விடலாம். ஆனால் தான் விரும்பும் கட்சி அல்லது சுயேட்சைக்குழுவின் சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டுக் காட்டுவது கட்டாயமாகும்.

**நிராகரிப்பு சந்தர்ப்பம்**

கட்சியின் அல்லது சுயட்சைக் குழுவின் சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டுக் காட்டாது விருப்பு வாக்குகளுக்கு மட்டும் புள்ளடியிடப்படின் அவ் வாக்குகள் நிராகரிக்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட கட்சியின் அல்லது சுயேட்சை குழுவின் நேரே புள்ளடியிடப்பட்டிருப்பின் அவ்வாக்கும் நிராகரிக்கப்படும். கட்சிக்கு அல்லது சுயட்சைக் குழுவுக்கு இடும் வாக்கானது கட்சி அல்லது சுயேட்சைக் குழுக்கள் பெறும் ஆசனத்தைத் தீர்மானிக்கும். விருப்பு வாக்குகள் இவற்றின் மூலம் பெறப்பட்ட ஆசனத்துக்கான பிரதிநிதி யார்? என்பதைத் தீர்மானிக்கும்.

**வாக்குக் கணிப்பீடு**

வாக்குக் கணிப்பீடானது பல்வேறு கணித உத்திகளின் பிரயோகங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும். வாக்கு கணிப்பீடு தேர்தல் மாவட்ட ரீதியாக தனித்தனியாக இடம் பெறும். அப்போது முதலில் இரு விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும். அத்தேர்தல் மாவட்டத்தில் கூடிய வாக்கைப் பெற்ற கட்சி அல்லது சுயட்சைக் குழு மாவட்டத்தில் குறைந்த வாக்கைப் பெற்ற கட்சி அல்லது சுயேட்சை குழுக்கள், (5 வீதம்

தொடர்ச்சி ▼

# நாடாளுமன்றத் தேர்தலும் உறுப்பினர்கள் தெரிவும் எவ்வாறு நடக்கின்றன?

தொடர்ச்சி▲

குறைந்த) எவை என அறியப்படும்.

இதன்படி கூடிய வாக்கைப் பெற்ற கட்சி அல்லது சுயேட்சைக் குழுவுக்கு ஒரு சன்மான அல்லது போனஸ் ஆசனம் வழங்கப்படும். குறைந்த வாக்கைப் பெற்ற கட்சி அல்லது சுயேட்சை குழுக்கள் அந்த மாவட்டத்தில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் 5 வீதத்துக்குக் குறைந்த வாக்கு (வெட்டுப்புள்ளி) பெற்ற கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் அத் தேர்தல் மாவட்டத்தில் எந்தவொரு ஆசனத்தையும் பெற முடியாது என்பதுடன் போட்டியில் இருந்து நீக்கப்படும்.

அப்போது போட்டியிலிருந்து நீக்கப்பட்டவர்களது வாக்குகள் அந்த மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த செல்லுபடியான வாக்கிலிருந்து கழிக்கப்படும். அவ்வாறு கழிக்கப்பட்டு வரும் மிகுதியான தொகை தொடர்புடைய வாக்குகள் அல்லது இசைவான வாக்குகள் என அழைக்கப்படும். இந்தத் தொடர்புடைய வாக்குகளை அந்த மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஆசன எண்ணிக்கையில் இருந்து ஒன்றைக் கழித்து வரும் எண்ணிக்கையால் பிரிக்க வேண்டும். அவ்வாறு பிரிக்கப்பட்டு வரும் தொகை விளைதொகை அல்லது முடிவெண் அல்லது தகுதிகாண் வாக்கு எனப்படும்.

விளைதொகையைக் கொண்டு தனித்தனியே ஒவ்வொரு கட்சி அல்லது சுயேட்சை குழுக்கள் பெற்ற வாக்குகளைப் பிரிக்க வேண்டும் (5 வீதத்துக்குக் குறைந்த வாக்குகளைப் பெற்ற பட்டியல்கள் தவிர) இவ்வாறு பிரிப்பதால் வரும் எண்ணிக்கை பட்டியலுக்கான ஆசனங்களாகும்.

இந்த நிலையில் குறித்த ஆசனங்களில் ஏதேனும் ஆசனங்கள் வழங்கப்படாது எஞ்சியிருக்குமானால் அவை பட்டியல்களின் பெரும்பான்மை மிகுதி வாக்குகளின் முன்னுரிமை அடிப்படையில் அவ்வாசனம் வழங்கப்படும். ஒவ்வொரு கட்சி அல்லது சுயேட்சைக் குழுக்கள் வெற்றி பெற்ற ஆசனங்கள் கணிப்பிடப்பட்ட பின்னர் அவ்வாசனத்துக்கு உரிய பிரதிநிதி யார்? என்பது விருப்பு வாக்குகளின் முன்னுரிமை அடிப்படையில் தீர்மானிக்கப்படும். இங்கு இடைத்தேர்தல்கள் நடைபெறாது ஒரு வெற்றிடம் ஏற்படுமாயின் அடுத்த முன்னுரிமை அடிப்படையில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்.

### தேசியப் பட்டியல் ஆசன ஒதுக்கீடு

தேசிய பட்டியல் முறை என்பது பொதுத்தேர்தல் இடம்பெற்று முடிந்ததும் தேசிய ரீதியாக கட்சி அல்லது சுயேட்சைகுழு பெறுகின்ற வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றுக்கான ஆசனங்களை ஒதுக்கீடு செய்கின்ற முறையே இதுவாகும். இதன் மூலம் 29 நாடாளுமன்ற உறுப்பினர்களை சட்ட மன்றில் மேலதிகமாக சேர்த்துக் கொள்ளும் ஓர் வழிமுறையாக இது அமைந்துள்ளது. அதாவது இலங்கை முழுவதும் அளிக்கப்பட்ட கட்சிகள் பெற்ற மொத்த செல்லுபடியான வாக்குகள் கவனத்தில் கொள்ளப்படும். இதனை தேசிய ரீதியாக பெற்ற மொத்த வாக்கு எனலாம். இம் மொத்த வாக்குகளை 29 என்ற எண்ணால் பிரிப்பர். இவ்வாறு பெறும் தொகை தகைமை பெறும் தொகை (ஒரு தேசிய பட்டியலுக்கான ஆசனத்தை பெறும் வாக்கு) எனலாம். இந்தத் தகைமை பெறும் தொகையைக் கொண்டு ஒவ்வொரு கட்சியும் தேசிய ரீதியாக பெற்ற வாக்குகளை தனித்தனியாக பிரிப்பர். அப்போது ஒவ்வொரு கட்சிக்குமான தேசிய பட்டியல் ஆசனங்கள் பெறப்படும்.

இந்த அடிப்படையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலும் நடைபெறும்.

வெற்றி பெறும் கட்சிகள் பிரதிநிதிகள் ஆட்சி அமைக்கும் கட்சி தொடர்பாக பொறுத்திருந்து பார்ப்போம்.

**வித்தகர் விபுலமாமணி,**
**வி.ரி. சகாதேவராஜா, காரைதீவு.**






# மார்பகப் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு சம்மாந்துறையில்

(தில்சாத் பர்வீஸ்)

இலங்கையில் மிகவும் தீவிரமான நோயாகக் காணப்படும் மார்பகப் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று இன்று புதன்கிழமை (16) சம்மாந்துறையில் நடைபெற்றது.

சம்மாந்துறை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் மார்பக் புற்றுநோய் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விழிப்புணர்வு ஊர்வலத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சஹிலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, ஊர்வலத்தில் பங்கேற்றார்.

சம்மாந்துறை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் முன்பாக ஆரம்பமான இந்த ஊர்வலம் சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலம் வரை சென்றது. பின்னர் அங்கிருந்து சம்மாந்துறை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு முன்பாக நிறைவடைந்தது.

இதில் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள், சுகாதார விழிப்புணர்வுக் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



# கண்டி மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தை எதிர்வரும் தேர்தலில் பாதுகாக்க வேண்டும்!

## தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட வேட்பாளர் பாரத் அருள்சாமி

**(க.கிஷாந்தன்)**

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தை கலைத்துள்ளமையால் எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நாட்டில் பொதுத் தேர்தல் இடம்பெறவுள்ளது. இந்தத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் ரெலிபோன் சின்னத்தில் நான் போட்டியிடுகின்றேன்.

கடந்த முறை நான் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட போது, 22,000 இற்கும் மேற்பட்ட வாக்குகளை வழங்கிய நீங்கள் இம்முறை அதிக வாக்குகளை வழங்குவீர்கள் என நம்புகின்றேன். கண்டி மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் தறபோது உள்ளது.

இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட வேட்பாளர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போது இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலில் செயற்குழுவின் கண்டி மாவட்ட அமைப்பாளர் விஷ்வா, கண்டி மாவட்ட செயலாளர் குலேந்திரன், செயற்குழு உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துக் கொண்டனர்.

இதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி சார்பாக கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளரான என்னுடைய வெற்றிப் பயணத்துக்காகத் தனது முழுப் பங்களிப்பை வழங்குவதற்கு செயற்குழு இதன்போது தீர்மானித்துள்ளது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தமிழ் பிரதிநிதித்துவத்தை மீண்டும் கண்டி மாவட்டத்தில் தக்கவைத்துக் கொள்வதற்காகவும், இளம் சிந்தனையோடு மற்றும் தூர நோக்குடன் கண்டி மாவட்டத்தினுடைய அபிவிருத்திக்கும் எமது மக்களின் அடையாளத்தை உறுதி செய்வதற்கும், மக்களுடைய குரலாய் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும், வெற்றியை உறுதி செய்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் இதன்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கண்டி வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகளைச் சட்டவாக்க சபையில் எடுத்துக் கூறி அவர்களுக்கு தீர்வை பெற்றுக் கொடுப்பதாக பல முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறிக் கொண்டாலும், இறுதியில் தங்களுடைய சுய இலாப அரசியலை முன்னெடுத்துள்ளனர்.

இதனால், கண்டி மாவட்ட தமிழ் மக்களுக்கான ஒரு குரலாக இலங்கையின் சட்டவாக்க சபையில் ஒலிப்பதற்கு எனக்கு பூரண ஆதரவை நீங்கள் வழங்குவீர்கள் என்று முழு நம்பிக்கையுடன் இந்தத் பொதுத் தேர்தலிலும் போட்டியிடுகின்றேன்.–என்றார்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



## வெடிகுண்டு மிரட்டல்:

# அவசரமாக தரையிறங்கிய எயார் இந்தியா விமானம்



அமெரிக்காவின் சிக்காகோ மாநிலத்திற்கு பயணம் செய்த இந்தியாவின் எயார் இந்தியா விமானம் கனடாவில் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

புது டில்லியிலிருந்து இன்று அதிகாலை 3 மணிக்கு சிகாகோவுக்கு புறப்பட்டுச் சென்ற போயிங் ரக 'எயார் இந்தியா 127' விமானத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விமானம் கனடாவின் இகுவாலிட் விமான நிலையத்துக்கு திசை திருப்பப்பட்டுள்ளது.

பின்னர், இகுவாலிட் விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ள இந்த விமானத்தில் வெடிகுண்டு இருக்கிறதா என்பது குறித்து சோதனை நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவின் உள்விவகாரங்களில் தலையிட பாகிஸ்தானுக்கு எவ்வித உரிமையும் இல்லை

## ஐ.நா.வுக்கான இந்திய தூதர் திட்டவட்டம்

இந்தியாவின் உள்விவகாரங்களில் தலையிட பாகிஸ்தானுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று ஐ.நா.வுக்கான இந்திய தூதர் எல்டோஸ் மேத்யூ புன்னூஸ் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

" பாகிஸ்தான் கூறும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் அனைத்தும் நிராகரிக்கப்படக்கூடியவை. இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்குப் பதிலாக பாகிஸ்தான் அதன் உள்நாட்டு பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட பாகிஸ்தானுக்கு எவ்விதமான தார்மீக உரிமையும் கிடையாது.

பாகிஸ்தான் கூறும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் பெரும்பாலும் ஜம்மு – காஷ்மீர், லடாக் தொடர்பானவை. இந்த பகுதிகள் அனைத்தும் இந்தியாவின் ஒருங்கிணைந்த மற்றும் பிரிக்க முடியாத பகுதி என்பதை அந்த நாடு உணர்ந்து கொள்ள வேண்டும். பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு, காஷ்மீர், லடாக் பகுதிகளில் தற்போது மனித உரிமை மீறல்கள் நடைபெற்று வருகின்றன. அதனை பாகிஸ்தான் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

இந்தியா துடிப்பான ஜனநாயகத்தை கொண்ட நாடு. ஆனால், பாகிஸ்தான் அதற்கு நேரெதிரான நிலைப்பாட்டை கொண்டது. போலியான தேர்தல்களை நடத்துவது, எதிர்க்கட்சி தலைவர்களை சிறையில் அடைப்பது, அரசியல் ரீதியில்எழும் உரிமை குரல்களை அடக்கிஒடுக்கும் செயலில் பாகிஸ்தான் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. எனவே, கறைபடிந்த அவர்களது ஜனநாயகத்தை பார்த்துப் பழகி உண்மையான ஜனநாயக நடைமுறைகளை போலியானது எனபாகிஸ்தான் கருத தொடங்கிவிட்டது.

அண்டை நாடுகளின் எல்லைகளில் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதை பாகிஸ்தான் ஒரு



கொள்கையாகவே கடைபிடித்து வருகிறது. அதற்கான ஆட்கள் மற்றும் ஆயுத உதவிகளை அந்த நாடு தொடர்ந்து வழங்கிவருகிறது. இது, மிகவும் கண்டனத்துக்குரியது. இதுபோன்ற நடவடிக்கைகளை அந்த நாடு உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஜம்மு–காஷ்மீரில் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெற்றுள்ளதை பாகிஸ்தானால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. போலியான ஜனநாயக முறைகளை கடைபிடிக்கும் பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு இந்தியாவின் உண்மையான ஜனநாயக நடைமுறையை ஏற்றுக்கொள்ள மனமில்லை.

இந்தியா 'பன்முகத்தன்மை, சமத்துவம், ஜனநாயகம்' போன்ற நற்பண்புகளுக்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது. அதேநேரம், பாகிஸ்தான் 'பயங்கரவாதம், குறுகிய மனப்பான்மை, துன்புறுத்தலை' அடிப்படையாக கொண்டு செயல்பட்டு வருகிறது. அண்டை நாடுகளின் விவகாரங்களில் தலையிட முயற்சிப்பதைவிட அதன் உள்நாட்டு பிரச்சினைகளை தீர்ப்பதில் பாகிஸ்தான் கவனம் செலுத்தவேண்டும்."– என்றார்.




# இந்திய வெளிவிவகார அமைச்சர் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்தார்

## 9 ஆண்டுகளுக்குப் பின் இடம்பெற்ற நிகழ்வு

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் பாகிஸ்தானுக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

9 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்திய அமைச்சர் ஒருவர் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக எஸ்.ஜெய்சங்கர் பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், இதன்போது இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கும், பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்புக்கும் இடையில் சந்திப்பொன்றும் இடம்பெற்றுள்ளது.

ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சிமாநாட்டில் கலந்து கொள்ள சென்ற வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை, பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் கைகுலுக்கி உற்சாகமாக வரவேற்றார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்.சி.ஓ 2023-24 ஆம் ஆண்டுக்கான தலைமைப் பொறுப்பை பாகிஸ்தான் ஏற்றுள்ளது. இதன் காரணமாக இந்த ஆண்டுக்கான எஸ்.சி.ஓ. மாநாடு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தலைமையில் இஸ்லாமாபாத்தில் தற்போது நடைபெற்று வருகிறது.

இந்த உச்சிமாநாட்டில் எஸ்.சி.ஓ. அமைப்பின் உறுப்பு நாடுகளான இந்தியா, சீனா, ரஷ்யா, ஈரான், கஜகஸ்தான், பெலாரஸ், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

இந்த மாநாட்டை ஒட்டி ஷெபாஸ் ஷெரீப், பிரதமர் நரேந்திர மோடிக்கு அழைப்பு விடுத்திருந்தார். அவரது அழைப்பை ஏற்று, பிரதமர் மோடிக்கு பதிலாக ஜெய்சங்கர் பங்கேற்றுள்ளார்.

இதற்காக நேற்று இஸ்லாமாபாத் சென்ற ஜெய்சங்கரை, விமான நிலையத்தில் அந்நாட்டின் வெளியுறவுத்துறை இக்குநர் ஜெனரல் இலியாஸ் மெகமூத் நிஜாமி வரவேற்றார். மேலும், ஒரு சிறுவன் மற்றும் ஒரு சிறுமி ஆகியோர் பாரம்பரிய உடை அணிந்து ஜெய்சங்கருக்கு பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

இதனையடுத்து, விருந்தினர்களுக்கு ஷெபாஸ் ஷெரீப் கொடுத்த இரவு விருந்தில் ஜெய்சங்கர் கலந்து கொண்டார். அப்போது ஷெபாஸ் ஷெரீப், ஜெய்சங்கரை கைகுலுக்கி உற்சாகமாக வரவேற்றார்.

இரண்டாவது நாளான இன்று, மாநாடு நடைபெறும் இடத்துக்கு வருகை தந்த ஜெய்சங்கரை, ஷெபாஸ் ஷெரீப் கைகுலுக்கி உற்சாகமாக வரவேற்றார். அப்போது, இருவரும் சிறிது நேரம் பேசிக்கொண்டனர்.

இந்த மாநாட்டில், வர்த்தகம் மற்றும் பொருளாதாரம் சார்ந்த பல்வேறு அம்சங்கள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டுக்குப் பிறகு பாகிஸ்தான் செல்லும் முதல் மத்திய அமைச்சர் ஜெய்சங்கர். 2016 ஓகஸ்ட்டில் பாகிஸ்தானில் நடைபெற்ற சார்க் உள்துறை அமைச்சர்களின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அப்போதைய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் இஸ்லாமாபாத் சென்றார். அதன் பின்னர் எந்த இந்திய அமைச்சரும் பாகிஸ்தானில் எந்த ஒரு கூட்டத்திலும் கலந்து கொள்ளவில்லை. கடைசியாக 2015 டிசம்பரில் வெளியுறவு அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் பாகிஸ்தானுக்குச் சென்றார்.







# காசாவுக்கான மனிதாபிமான உதவிகளை அதிகரிக்குமாறு அமெரிக்கா வலியுறுத்தல்

காசாவுக்கான மனிதாபிமான உதவிகள் அதிகரிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி, அமெரிக்கா இஸ்ரேலுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இதன்படி, 30 நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதுடன் காசாவுக்கான உதவிகள் அதிகரிக்கப்படாவிட்டால் தங்களது இராணுவ உதவிகள் துண்டிக்கப்படும் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது தமது நட்பு நாட்டுக்கு அமெரிக்கா விடும் எச்சரிக்கையாகக் கருதப்படுகிறது.


வடக்கு காசாவில் இஸ்ரேல் புதிய தாக்குதல்களை ஆரம்பித்துள்ள நிலையில் அமெரிக்கா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இஸ்ரேலின் புதிய தாக்குதலை அடுத்து பலர் உயிரிழந்தனர் என கூறப்படுகிறது.

அதேநேரம் வடக்கு மற்றும் தெற்கு காசாவுக்கான 90 சதவீத மனிதாபிமான உதவிக்கு இஸ்ரேல் தடை விதித்துள்ளது.

இந்தநிலையில், மனிதாபிமான உதவிகளை அதிகரிக்க வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்திக் கடிதம் அனுப்பியுள்ளது.

இதற்குப் பதிலளித்துள்ள இஸ்ரேல், இந்த விடயம் தொடர்பில் தங்களது தரப்பு ஆராய்வதாக அறிவித்துள்ளது.









கனடா முரசு

புதன்கிழமை 16/10/2024

## பணவீக்க வீதம் 1.6 ஆக பதிவு

கனடாவில் கடந்த செப்டம்பர் மாதத்திற்கான பணவீக்கம் குறித்த தகவல் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி கனடாவின் 02



# கனடாவை அச்சுறுத்தும் அயலக அரசின் செயல்களை ஏற்றுக்கொள்ள முடியாது

## பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவிப்பு

**இந்தியா தவறு செய்துவிட்டது என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.**

**இது இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசலை அதிகரித்துள்ளது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. .**

**இந்தியாவில் சீக்கியர்களுக்கு தனி நாடு வேண்டும் எனக் கோரி காலிஸ்தான் உள்ளிட்ட சில பிரிவினைவாத இயக்கங்கள் வெளிநாடுகளில் செயல்பட்டு வருகின்றன. இந்த சூழலில் கனடா நாட்டில் வசித்து வந்த பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் கடந்த ஆண்டு ஜூன் மாதம் சுட்டுக் கொல்லப்பட்டார். இதில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டியிருந்தார். இதை இந்தியா மறுத்தது.**

தொடர்ந்து இருதரப்பு நாடுகளுக்கு இடையிலான உறவு விரிசல் அடைந்தது.

இந்நிலையில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, “கனடா நாட்டு மண்ணில் கனடா மக்களை அச்சுறுத்தும் மற்றும் கொல்லும் வெளிநாட்டு அரசாங்கத்தின் செயலை ஒருபோதும் எங்களால் பொறுத்துக்கொள்ள முடியாது. இது கனடாவின் இறையாண்மை மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ள முடியாத அத்துமீறல்.

கடந்த கோடை காலத்தின் தொடக்கம் முதலே எங்களது ‘ஃபைவ் ஐஸ் பார்ட்னர்ஸ்’ (அவுஸ்திரேலியா, கனடா, நியூஸிலாந்து, பிரிட்டன் மற்றும் அமெரிக்கா) உடன் இணைந்து நெருக்கமாக பணியாற்றி வருகிறோம். குறிப்பாக இந்தியாவின் இது மாதிரியான செயலை எதிர்கொண்ட அமெரிக்காவுடன் சேர்ந்து இந்த விவகாரத்தில் கவனம் செலுத்துகிறோம்.” எனக் கூறியுள்ளார்.

முன்னதாக, இது தொடர்பாக இந்திய மத்திய வெளியுறவு துறை அமைச்சகம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,

“கனடாவில் உள்ள இந்திய தூதர் மற்றும் பிற தூதரக அதிகாரிகள் மீது ஆதாரமின்றி குற்றம் சாட்டி இருப்பதை முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அந்நாட்டு தூதரக பொறுப்பாளரிடம் தெரிவிக்கப்பட்டது.

தீவிரவாதம் மற்றும் வன்முறை சூழலில், ஜஸ்டின் ட்ரூடோ அரசின் நடவடிக்கைகள் இந்திய அதிகாரிகளின் பாதுகாப்புக்கு ஆபத்தை விளைவித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது. அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் தற்போதைய கனடா அரசின் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. எனவே, அங்குள்ள இந்திய தூதர் மற்றும் பிற அதிகாரிகளை திரும்பப் பெற முடிவு செய்துள்ளோம் என அவரிடம் தெரிவிக்கப்பட்டது.

கனடா அரசிடமிருந்து ஒரு தகவல் வந்துள்ளது. அதில் ஒரு வழக்கு விசாரணையில் இந்திய தூதர் மற்றும் இதர தூதரக அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது என கூறப்பட்டுள்ளது. இந்திய அரசு இந்த அபத்தமான குற்றச்சாட்டுகளை கடுமையாக நிராகரிக்கிறது. ட்ரூடோ தலைமையிலான அரசு, வாக்கு வங்கி அரசியலை கருத்தில் கொண்டு இதுபோன்ற குற்றச்சாட்டை சுமத்தி உள்ளது.

இந்தியாவுடன் கனடா ஜஸ்டின் ட்ரூடோ நீண்ட காலமாகவே விரோதப் போக்கை கடைபிடித்து வருகிறார் என்பதற்கு ஆதாரம் உள்ளது. கடந்த 2018 ஆம் ஆண்டு வாக்கு வங்கியை அதிகரித்துக் கொள்வதற்காகவே அவர் இந்தியா வந்திருந்தார். மேலும் இந்தியாவுக்கு எதிராக செயல்படும் பிரிவினைவாத மற்றும் தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்பில் இருந்தவர்களை அமைச்சர்களாக நியமித்தார். இது தவிர, கடந்த 2020 ஆம் ஆண்டு இந்தியாவின் உள்நாட்டு விவகாரத்தில் (விவசாயிகள் போராட்டத்துக்கு ஆதரவு) தலையிட்டார். இதுவே அவரது இந்தியாவுக்கு எதிரான மனநிலையை பிரதிபலித்தது. இந்தியாவுக்கு எதிராக பிரிவினை வாத செயலை வெளிப்படையாக ஆதரிக்கும் ஒரு அரசியல் கட்சியை ஜஸ்டின் ட்ரூடோ அரசு நம்பி இருக்கிறது. இந்நிலையில், உள்நாட்டு அரசியலில் வெளிநாட்டு தலையீடு இருப்பதை ட்ரூடோ கண்டுகொள்வதில்லை என்ற விமர்சனம் எழுந்துள்ளது.இதையடுத்து, வெளிநாட்டு தலையீடு தொடர்பான கமிஷன் முன்பு ட்ரூடோ ஆஜராகி விளக்கமளிக்க இருக்கிறார். இந்நிலையில் இதை திசை திருப்புவதற்காகவே அவர் இந்தியா மீது குற்றம் சுமத்துகிறார்.”– என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# கனடாவில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு இந்திய இளைஞர்கள் பலி

இந்தியாவின் பஞ்சாபைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள், கனடாவில் வீதி விபத்தொன்றில் பலியாகியுள்ளார்கள்.

இந்த விபத்து எதனால் நேர்ந்தது என்பது இதுவரை தெளிவாகத் தெரியாத நிலையில், விபத்தில் இறந்தவர்களில் ஒருவர் ஆழாயடை என்னுமிடத்தையும், மற்றவர் Bathinda என்னும் இடத்தையும் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர்களில் ஒருவருடைய பெயர் Harshanur Singh (வயது 20). அவர் 2023 ஆம் ஆண்டு டிசம்பரில்தான் கல்வி கற்பதற்காக கனடாவுக்குச் சென்றுள்ளார்.



Harshanur தனது நான்கு நண்பர்களுடன் Coquihalla நெடுஞ்சாலையில் காரில் பயணித்துக்கொண்டிருந்த தாகவும், அப்போது கார் விபத்துக்குள்ளானதாகவும், விபத்தில் ஸஅவரது நண்பரும் பலியாகியுள்ளார். மற்றவர்கள் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர் என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

தங்கள் மகனுடைய உடலை இந்தியாவுக்குக் கொண்டுசெல்லும் முயற்சியை குடும்பத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

# கனடாவிற்குள் ஆமைகளை கடத்த முயன்ற பெண் கைது

கனடாவிற்குள் ஆமைகளை கடத்த முயன்ற பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 41 வயதான வேன் யீ நக் என்ற சீன பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.


சுமார் 29 ஆமைகளை இந்த பெண் கடத்த முயற்சித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

படகுமூலம் அமெரிக்க எல்லைப் பகுதியில் இருந்து கனடாவிற்குள் இந்தப் பெண் ஆமைகளை கடத்திச் செல்ல முயற்சித்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பெண்ணுக்கு பத்து ஆண்டுகள் வரையில் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் எனவும் 250,000 டொலர் அபராதம் விதிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவில் இந்த வகை ஆமைகளுக்கு நல்ல கிராக்கி உண்டு எனத் தெரிவிக்கப்படுகின்றது.






## பணவீக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணவீக்க விதமானது 1.6 வீதம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய புள்ளி விபரவியல் திணைக்களம் இது தொடர்பான தகவலை வெளியிட்டு வலியுள்ளது.

எதிர்வரும் சில மாதங்களுக்கு கனடாவின் பண வீக்க வீதமானது இரண்டு வீதத்திற்கு குறைவாக காணப்படும் என பொருளியல் நிபுணர் ட்யூ நக்கி என்று தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி நாட்டின் பணவீக்க வீதத்தை இரண்டு வீதமாக பேணும் இலக்கினை கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

எதிர்வரும் 23 ஆம் திகதி வட்டி வீதம் தொடர்பில் மத்திய வங்கி முக்கிய அறிவிப்பு வெளியிட உள்ளது. பணவீக்கத்தின் நிலையை அடிப்படையாகக் கொண்டு வட்டி வீதம் நிர்ணயம் செய்யப்படுகின்றது.

கடந்த செப்டம்பர் மாதம் பணவீக்கம் குறைவடைந்தமைக்கு எரிபொருள் விலை வீழ்ச்சி முக்கிய ஏதுவாக அமைந்தது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, வாடகை தொகைகள் அதிகரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் உணவுப் பொருட்களுக்கான விலைகள் தொடர்ந்தும் அதிகரிப்பினை பதிவு செய்து வருவதாக கனடிய புள்ளி விபரவியல் திணைக்களம் சுட்டிக்காட்டி உள்ளது.





# இலங்கைக்கான கனேடிய தூதுவர் எரிக் வால்ஷ் முல்லை.கைத்தறி மையத்திற்கு விஜயம் செய்தார்

இலங்கைக்கான கனேடிய தூதுவர் எரிக் வால்ஷ் நேற்று முல்லை கைத்தறி மையத்துக்கு வருகை தந்திருந்தார்.

இந்த மையம் கனேடிய தமிழர் பேரவையின் (CTC) ஆதரவில் செயற்பட்டு வருகின்றது. இந்த மையம் இலங்கையின் உள்நாட்டுப் போரில் மிக அதிகமாக பாதிக்கப்பட்ட முள்ளைத்தீவு மாவட்டத்தில், புதுக்குடியிருப்பு கிராமத்தில் அமைந்துள்ளது.

தற்போது இங்கு 20 பெண்கள் கைத்தறி துறையில் பயிற்சி பெற்று வருகின்றனர். இலங்கைக்கான கனேடிய தமிழர் பேரவையின் மனிதாபிமானத் திட்ட ஒருங்கிணைப்பாளர் துஷ்யந்தன் ஆர். துரைரத்னம் மற்றும் நேுநுனு மையத்தின் இயக்குனர் குழு உறுப்பினர் பிரதீபன் சோதிலிங்கம் ஆகியோர் கனேடிய தூதுவரை வரவேற்று இந்த கைத்தறி மையத்தின் செயல்பாடுகள் குறித்தும் இது மக்களுக்குக் கொண்டு வந்துள்ள நன்மைகள் குறித்தும் விளக்கமளித்தனர்.

முல்லை கைத்தறி மையத்தில் உருவாக்கப்பட்ட கைத்தறி புடவைகள் கனடாவில் நடைபெறும் தமிழ் விழாக்களில், குறிப்பாக 2024ஆம் ஆண்டு தமிழர் தெருவிழாவில் பெரும் ஆதரவை பெற்றிருந்ததோடு அதிக அளவில் விற்பனையாகியும் இருந்தது.

இத்திட்டம் போரினால் கணவனை இழந்த பெண்கள் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட பெண்களை ஆற்றல்மிக்கவர்களாக உருவாக்கி, அவர்களுக்குப் பொருளாதார சுதந்திரத்தையும் நிலையான தொழில் வாய்ப்புகளையும் உருவாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது.

கைத்தறி நெசவுத் துறையில் திறனை மேம்படுத்துவதன் மூலம், இந்தப் பெண்கள் மற்றும் அவர்களுடைய சமூகங்களில் நீண்டகாலத்துக்கு தொடர்ச்சியான மாற்றத்தை ஏற்படுத்துவதை இத்திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

எதிர்காலத்தில், இவர்களின் தயாரிப்புகளை உலகளாவிய சந்தைக்கு விரிவுபடுத்துவதன் மூலம், அவர்களுக்கு தொடர்ந்த ஆதரவை வழங்கவும், அதிக பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குவும் கனடிய தமிழர் பேரவை திட்டமிட்டுள்ளது.

இலங்கைக்கான கனேடிய தூதுவ எரிக் வால்ஷின் இந்த வருகைக்கு சான்றாக கைத்தறி மையத்தில் தென்னை மரம் ஒன்றும் அவரால் நட்டுவைக்கப்பட்டது.















